மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 150/2009

பெயர் : பொன்னுசாமி
சாட்சி – பி.வா.சா–3 நாள்: 06.11.2025

---

**குறுக்கு விசாரணை (வாதிகள் தரப்பு)**

1. 1, 2 வாதிகள் எனது அத்தைகள் என்றால் சரிதான். எனது அப்பாவுடன் உடன் பிறந்தவர்கள். சுப்பையா கவுண்டருக்கு 8 வாரிசுகள் என்றால் சரிதான். 6 மகன்கள், 2 மகள்கள் ஆவார்கள். எனது அத்தைகள் இருவரும் தாவா சொத்துக்களில் 8ல் 2 பங்கு பாகம் கொடுக்க வேண்டும் என்று பாகப்பிரிவினைக்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். எனது பாட்டி நாகம்மாள் எழுதி வைத்ததாக சொல்லும் உயில் எனது தந்தையை தவிர மற்ற 5 பேருக்கும் எழுதி வைக்கப்பட்டுள்ளது என்றால் 2 பேருக்கு மட்டும் தான் எழுதி வைக்கப்பட்டுள்ளது.

2. உயிலின் அசல் ஆனது யாரிடம் தற்போது உள்ளது என்றால் யாரிடம் உள்ளது என்று தெரியவில்லை எனது சித்தப்பாக்களிடம் யாரிடமாவது ஒருவரிடம் இருக்கும். உயிலின் அசல் ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. மேற்படி உயிலின்படி எனது தகப்பனாருக்கு சொத்து எழுதி வைக்கப்படவில்லை என்று சொல்லும் நான், மேற்படி உயிலை பார்த்தே இருக்காதபோது மேற்படி உயில் செல்லும் என்று சொல்வதற்கு எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

3. தாவா 1வது அயிட்ட சொத்தானது சுப்பையா கவுண்டருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். சுப்பைய கவுண்டரின் பெண் வாரிசுகளான 1, 2 வாதிகள் தங்களுக்கு சொத்து எதுவும் வேண்டாம் என்று ஏதேனும் விடுதலை ஆவணம் எழுதி கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. 1, 2 வாதிகளோ, வாதிகளின் குடும்பத்தை சேர்ந்தவர்களோ 1984 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்தில் சாட்சியாக எதுவும் கையெழுத்து போட்டு உள்ளார்களா என்றால் இல்லை.

4. சுப்பையா கவுண்டருக்கு மேற்படி சொத்தானது பூர்வீக அடிப்படையில் வந்த சொத்து என்றால் சரிதான். சுப்பையா கவுண்டர் 1983 ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். சுப்பையா கவுண்டர் இறந்து ஒரு ஆண்டுக்குள் ஆண் வாரிசுகள்

பாகப்பிரிவினை செய்து கொண்டுள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் கூட்டுக் குடும்ப பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான்.

5. தாவா சொத்துக்கள் கூட்டுக் குடும்ப பூர்வீக வகை சொத்துக்கள் என்றுள்ளபோது, இரண்டு பேரை மட்டும் தவிர்த்து விட்டு பாகப்பிரிவினை செய்து கொண்டால் மேற்படி இருவரையும் பாகப்பிரிவினை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 1, 2 வாதிகள் இருவருக்கும் எவ்வளவு நகை கொடுத்தார்கள், எவ்வளவு சீர் செய்தார்கள் என்று எதையும் எங்களது எதிர் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சுப்பையா கவுண்டர் உயிருடன் இருக்கும்போது 1, 2 வாதிகள் இருவருக்கும் திருமணம் நடைபெற்று உள்ளது என்றால் சரிதான்.

6. நாங்கள் சொல்வது போல் சீர்வரிசைகள், நகைகள் செய்யப்பட்டிருந்தால் அதனை குறிப்பிட்டு சொல்லி இருப்போம் என்றும், எதுவும் செய்யாததால் தான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை செய்யும் போது அவர்களுக்கு பணமாக கொடுக்கப்பட்டது. 1, 2 வாதிகள் இருவருக்கும் பணமாக பாகப்பிரிவினையின் போது எவ்வளவு கொடுக்கப்பட்டது, யார் முன்னிலையில் கொடுக்கப்பட்டது என்பது குறித்து எதையும் எங்களது எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

7. தாவா சொத்துக்கள் அனைத்தும் சுக்கம்பாளையம், கோடாங்கி பாளையம் என்ற அடுத்தடுத்து உள்ள இரு கிராமங்களில் உள்ளன என்றால் சரிதான். 2ம் வாதி காடாம்பாடியில் உள்ளார். 1ம் வாதி கருமத்தம்பட்டியில் இருந்தார். எனது அப்பா மற்றும் அவரது சகோதரர்கள் கோடாங்கி பாளையத்தில் இருந்தார்கள். எனது அப்பா பாகசாசனம் செய்து கொண்ட சொத்தின் ஒரு பகுதியை 13ஆம் பிரதிவாதி நடராஜனுக்கு விற்று உள்ளார் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். 13ம் பிரதிவாதிக்கு விற்கும் போது நானும், எனது சகோதரியும் இளவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரயத்தில் எனது சகோதரிக்காகவும் விற்பதாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. எனது தகப்பனார் இறந்த பின்னர் எனக்கும், எனது சகோதரி மற்றும் தாய் ஆகியோர்களுக்கும் வாரிசுரிமை அடிப்படையில் சொத்தில் உரிமை உள்ளது என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். 1984 ஆம் ஆண்டு 1, 2 வாதிகளை விட்டு விட்டு செய்து கொண்டுள்ள பாகப்பிரிவினை பத்திரமே செல்லாத ஆவணம் அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நாங்கள் மட்டுமே தாவா சொத்தின்

சுவாதீனத்தில் உள்ளதாக சொல்வது உண்மையல்ல என்றும், கூட்டுரிமையாளர் சொத்தின் அனுபவத்தில் இருந்தாலும், இல்லை என்றாலும் அவர் சுவாதீனத்தில் இருப்பதாகத்தான் கருதப்படும் என்றால் சரியல்ல.

9. வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்ததை மட்டும் வைத்துக்கொண்டு வாதிகளுக்கு பாத்தியப்பட்ட பங்கில் நாங்கள் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் எனது தகப்பனார் எனது பெயருக்கு எழுதி வைத்துள்ள தான செட்டில்மெண்ட் பத்திரமே செல்லாது என்றால் சரியல்ல.

10. தாவா சொத்தில் 1, 2 வாதிகளுக்கு சட்டப்படி பங்கு உள்ளபோது அவர்களை விட்டுவிட்டு எனது தகப்பனார் தனிப்பட்ட முறையிலும் மற்றும் அவரது சகோதரர்களுடன் சேர்ந்தும் ஏற்படுத்தியுள்ள ஆவணங்கள் எதுவும் சட்டப்படி செல்லாது மற்றும் அவர்களை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வாதிகள் தாவா சொத்தின் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்று சொல்வது தவறு என்றும், வாதிகள் எங்களுடன் சேர்ந்து கூட்டு சுவாதீனத்தில் தான் இருந்து வருகிறார்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.11.06 18:43:37 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.